රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය

**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்த சேவைகள் பிரிவு COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| දුරකතනය<br>தொலைபேசி: **(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்: **(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No: CS/DOS/01/12/Observation | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No: | දිනය<br>திகதி:<br>Date: 2017.04.28 |

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்,
நிறுவன தலைவர்கள்/மாவட்டச் செயலாளர்களிற்கு,

**<u>பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ மேற்பார்வைப் பிரிவிற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் மேற்பார்வை அலுவலர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்.</u>**

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் வெற்றிடம் நிலவுகின்ற பெருந்தோட்டக் கைத்தொழில் மேற்பார்வை அலுவலர் பதவிகள் 24 இனை தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலீடுபட்டிருக்கும் அலுவலர்களைக் கொண்டு பூர்த்தி கொள்வது தொடர்பிலான அமைச்சரவைத் தீர்மானம், இல.17/0478/726/008 மற்றும் 2017.04.06 ஆம் திகதிய தீர்மானத்தினூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, அரச சேவையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுள் விவசாயம், உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல், முகாமைத்துவம் மற்றும் பொருளியல் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றுள்ள பட்டதாரிகள் தொடர்பிலான ஆய்வொன்றை மேற்கொண்டு அவர்களை பெருந்தோட்டக் கைத்தொழில் மேற்பார்வை அலுவலர் சேவையிலீடுபடுத்துவதற்கான முறையான படிமுறைகளைத் தயாரிப்பதற்கான தேவையிருக்கிறது.

எனவே, கொழும்பு மாவட்டத்தில் அமைந்திருக்கும் அலுவலகங்களில் (உமது நிறுவனத்திற்குப் பொறுப்பான) இணைக்கப்பட்டு கடமை புரியும் மேற்குறித்த கல்வித்துறைகளில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சம்பந்தமான தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையிருப்பதால் கீழ் தரப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து adcs.pubad@gmail.com எனும் இ-தபால் முகவரிக்கோ அல்லது கீழ்குறிப்பிடப்படும் அலுவலக முகவரிக்கோ 2017.05.15 ஆம் திகதிக்கு முன் கிடைக்க ஆவண செய்யுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

| பெயர் | தேசிய அடையாள அட்டை இல. | முகவரி | தொலைபேசி இல. | பெற்றுள்ள பல்கலைக்கழக பட்டம் | கற்கைத்துறை | இப்பதவிக்காக இவ்அலுவலர் தெரிவு செய்யப்பட்டால் இவரை விடுவிப்பு செய்ய முடியுமா/ முடியாதா என்பது பற்றி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

அலுவலக முகவரி :
பணிப்பாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கிளை)
இணைந்த சேவைகள் பிரிவு
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு – 07

ஒப்பம்./ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்